**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.189/2017** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.6 | |
| Name: | வேலுச்சாமி, காவல் உதவி ஆய்வாளர் | Caste |
| Father's Name | கோவிந்தன் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 56 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 15.10.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2017 அன்று அறந்தாங்கி காவல் நிலைய நிலைய பொறுப்பில் சிறப்பு காவல் உதவியாளர் திரு.மனோகர் அவர்களால் 08.04.2017 அன்று சுரேஷ் த/பெ தங்கராஜ் அளித்த புகார் வாக்குமூலத்தினை பெற்று நிலைய குற்ற மனு எண்.131/2017 ஆக பதிவு செய்யப்பட்டு வைத்திருந்ததை பார்வையிட்டு அன்றைய நிலைய பொறுப்பில் இருந்த நான் நிலைய குற்ற எண்.185/2017 ஆக இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கையானது எதிரிகள் மீது பதிவு செய்தேன். மேறப்டி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) மேற்படி இவ்வழக்கில் சம்பவ இடம் சாட்சிகள் நாராயணன், ராமசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் ஆனது அ.சா.ஆ.4 ஆகவும், மேற்படி மாதிரி வரைபடமானது அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யததும் எதிரிகளை தேடி வந்த நிலையில் 10.04.2017 அன்று நிலையம் ஆஜரான எதிரிகள் நால்வரையும் கைது செய்து பின்னர் நிலைய பிணையில் அன்றே விடுவித்தேன். எதிரிகள் நால்வரும் இன்றுவரை நிலைய பிணையில் இருந்து வருகிறார்கள். வழக்கின் சம்பவ இடத்தினை பார்வையிட்டு சம்பவ சாட்சிகளான சுரேஷ், கௌசல்யா, தமிழரசி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலமானது பதிவு செய்தேன். பின்னர் நான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன்.

**குறுக்கு விசாரணை**

3) குற்ற நிகழ்வு 06.04.2017 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது 4 நாட்கள் காலதாமதமாகத்தான் பதிவு செய்தோம் என்றால் மனுவின் மீது விசாரணை செய்தோம். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 1 கி.மீ தூரம் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் என்ன பிரச்சனை என எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் குடும்பத்திற்குள் கொடுக்கல், வாங்கல் பிரச்சனை. அ.சா.2 அ.சா.1ன் மனைவி, அ.சா.3 அ.சா.1ன் மாமியார் என்றால் சரிதான். 3ம் எதிரி அ.சா.3ன் அண்ணன் மகள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் 2, 3, 4 அ.சா.2ன் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் குடும்பத்தார்கள் என்று தெரியும். உடன்பிறந்த சகோதரரா என தெரியாது. சம்பவ இடத்திற்கு மேற்கே அமுதா என்பவரின் வீடு உள்ளதா என்றால் சரிதான்.

4) அதன் அருகே கேசவன் என்பவர் வீடும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மேற்கே பாலமுருகன் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை நான் விசாரணை செய்து சாட்சிகளாக பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சம்பவத்தின்போது அவர்கள் யாரும் இல்லை. எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடப்பிரச்சனையினை எனது விசாரணையில் நான் முழுமையாக நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக கொடுத்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி காயங்கள் ஏதும் புகார்தாருக்கு ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எங்கேயோ, எப்படியோ ஏற்பட்ட காயத்தினை எதிரிகள் ஏற்படுத்தியாக கொடுத்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் நான் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.189/2017** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.7 | |
| Name: | குணசேகரன், காவல் ஆய்வாளர் | Caste |
| Father's Name | கருப்பண்ணன் முதலியார் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 45 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 15.10.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மணமேல்குடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் உதவி ஆய்வாளர் திரு.வேலுச்சாமி அவர்கள் பணி மாறுதல் ஆன பிறகு வழக்கின்கோப்பானது மேல்விசாரணைக்காக 29.10.2017 அன்று என்னால் எடுத்து கொள்ளப்பட்டது. வழக்கு கோப்பினை விசாரணைக்காக எடுத்துகொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தினை பார்வையிட்டதில் உதவி ஆய்வாளர் திரு.வேலுச்சாமி அவர்கள் தயார் செய்த மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஒரே மாதிரியாக இருந்ததால் தனியாக மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யவில்லை. பின்பு சம்பவ இட சாட்சிகள் சுரேஷ், கௌசல்யா, தமிழரசி, ராமசாமி, நாராயணன் ஆகியோர்களை விசாரணை செய்ததில் உதவி ஆய்வாளர் திரு.வேலுச்சாமி அவர்கள் தயார் செய்த வாக்குமூலங்கள் ஒரே தகவலை தெரிவித்ததால் தனியாக வாக்குமூலங்கள் தயார் செய்யவில்லை.

2) வாதிக்கு சிகிச்சை அளித்த அறந்தாங்கி அரசு மருத்துவர்கள் திரு.ஆறுமுகம், திருமதி.நிலோபர் அவர்களை விசாரணை செய்து தனித்தனியா வாக்குமூலமானது பதிவு செய்தேன். **மேற்படி சுரேஷ் விபத்து பதிவேடானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புதுக்கோட்டை மருத்துவமனை விபத்து பதிவேடானது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி காயச்சான்றானது அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் குற்றத்தன்மைக்கேற்ப சட்டப்பிரிவுகள் இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323 என்பதனை இ.த.ச.பிரிவுகள் 294(பி), 325 என சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை தாக்கல் செய்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் விசாரணையினை முடித்து இ.த.ச பிரிவுகள் 294(பி), 325 கீழ் 29.10.2017 அன்று எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

3) இருவருக்கும் என்ன பிரச்சனை என விசாரணையில் தெரியவந்தது என்றால் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை என்பது தெரியவந்தது. 1ம் எதிரி அ.சா.3 ன் அண்ணன் மகள் என்றால் சரிதான். அதே போன்று அ.சா.3 ன் உடன் பிறந்த சகோதரர்கள் தான் 1, 2, 3 எதிரிகள் என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இருந்து வந்த முன்விரோதத்தினை சரியான முறையில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தடய பொருட்கள் ஏதும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே விசாரணை செய்திருந்திருந்த விசாரணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தனிவிசாரணையானது என்னால் மேற்கொள்ளப்பட்டது. நான் முறையாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிமீது இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், சம்பவத்திற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு எங்கேயோ ஏற்பட்ட காயத்தினை சம்பவத்தில் ஏற்பட்டதாக பொய்யாக கொடுத்த புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.